



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.12.2024) உயர்கல்வித் துறை சார்பில் சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் 21 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சிறப்பு மாணவ, மாணவியர்களுக்கான விடுதிக் கட்டடங்களை திறந்து வைத்து, அங்கிருந்த மாணவர்களிடம் கலந்துரையாடினார். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, துணை மேயர் மகேஷ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றரசு, உயர்கல்வித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் சு.கோபால், கல்லூரிக் கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## ரூ. 21.60 கோடி செலவில் – சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில்

# சிறப்பு மாணவர் - மாணவியர்களுக்கு விடுதிக் கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து மாணவிகளிடம் உரையாடினார்!

**சென்னை, டிச. 6 -**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.12.2024) உயர்கல்வித் துறை சார்பில் சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் 21 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சிறப்பு மாணவர் மற்றும் மாணவியர் விடுதிக் கட்டடங்களை திறந்து வைத்தார்.**

**உயர்கல்வி சேர்க்கையில் முதலிடம் வகிக்கும் தமிழ்நாடு!**

தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில், அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவனங்களை தொடங்குதல், அதன் வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப்படைப்புகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலை வாய்ப்பினை உறுதி செய்தல், "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் தகுதிவாய்ந்த திறன் மிகு இளைஞர்களை உருவாக்குதல், அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த மாணவி கள் உயர்கல்வி பயில புதுமைப் பெண் திட்டம்,

அதேபோன்று அரசுப் பள்ளி மாணவர்கள் உயர்கல்வி பயில தமிழ்ப்புதல்வன் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் மாதம் ரூ.1000/உதவித் தொகை வழங்குதல், முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு சலுகைகள், கல்லூரி கள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது.

சென்னை மாநிலக் கல்லூரியில் 5.07.2022 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில், முதலமைச்சர் அவர்கள், 300க்கும் மேற்பட்ட சிறப்பு மாணவ, மாணவியர்கள் தமிழ்நாட்டின் பல்வேறு ஊர்களில் இருந்து இங்கே வந்து, தங்கிப் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குத் தேவையான வசதிகளுடன் கூடிய விடுதிகள் இல்லாத காரணத்தால், சிறப்பு மாணவ, மாணவியர்களுக்கான சிறப்பு வசதிகளுடன் மாநிலக் கல்லூரி வளாகத்திலேயே அவர்களுக்கு விடுதி அமைத்துத் தரப்படும் என்று அறிவித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.12.2024) உயர்கல்வித் துறை சார்பில் சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் 21 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சிறப்பு மாணவர் மற்றும் மாணவியர் விடுதிக் கட்டடங்களை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, முனைவர் கோவி செழியன், மேயர் திருமதி.ஆர்.பிரியா, துணை மேயர் மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றாக, உயர்கல்வித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.கோபால், கல்லூரிக் கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**அறிவித்தவாறு திட்டத்தை நிறைவேற்றிய முதல்வர்!**

அந்த அறிவிப்பிற்கிணங்க, சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் 21 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சிறப்பு மாணவர் மற்றும் மாணவியர் விடுதிக் கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், விடுதிகளை திறந்து வைத்து பார்வையிட்ட பின், அங்கு தங்கியுள்ள சிறப்பு மாணவ, மாணவியர்களிடம், அவர்களுக்கு தேவையான வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதா என்றும், வேறு என்ன வசதிகள் தேவை என்றும் வினவினர். அதற்கு அம்மாணவ, மாணவியர்கள் தேவையான வசதிகள் உள்ளது என்றும், விடுதியை அமைத்து தந்ததற்கு தங்களது நன்றியினையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டனர்.

**சிறப்பு மாணவியருக்கு தனிக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது!**

இவ்விடுதிக் கட்டடங்களானது, சிறப்பு மாணவர்களுக்கு தனிக் கட்டடமாகவும், சிறப்பு மாணவியருக்கு தனிக் கட்டடமாகவும் கட்டப்பட்டுள்ளது. இக்கட்டடங்கள் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 64,455 சதுர அடி கட்டட பரப்பளவில் 38 மாணவர் அறைகள் மற்றும் 32 மாணவியர் அறைகளுடன், 114 மாணவர்களும், 96 மாணவியர்களும் தங்கும் வசதியுடன் கட்டப்பட்டுள்ளது.

இச்சிறப்பு மாணவ, மாணவியருக்கான விடுதிகளின் அனைத்து தளங்களிலும் தொட்டுணரக்கூடிய வழிகாட்டும் மேற்பரப்பு குறிகாட்டிகளுடன் (Tactile Guiding Surface Indicators) கூடிய தரை அமைப்பு, பார்வையற்ற சிறப்பு மாணவர்களுக்கான பிரெய்லி பலகைகள் (அணுகக்கூடிய வடிவங்களில் வழி கண்டறிதல் மற்றும் தகவல் அடையாளங்கள் பொருத்தப்பட்டுள்ளன), அனைத்து அறையிலும் அவசர அழைப்பு மணி பொருத்தப்பட்டுள்ளது.

**சிறப்பு மாணவர்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அறைகள்!**

ஒவ்வொரு அறையிலும் சிறப்பு மாணவர்கள் பயன்படுத்தும் வகையில் சிறப்பு வகை அலமாரிகள், அனைத்து அறைகளிலும் ஸ்மார்ட் லாக், பிரத்யேக சாய்தள அமைப்பு, ஒவ்வொரு குளியலறை மற்றும் கழிவறைகளில் அவசரக் குறியீடு விளக்குகள், கழிவறைகளில் சிறப்பு வைகிராப் பார்கள் (Special Type Grap Bars), நான்கு மின்தூக்கிகளிலும் ஒலி மற்றும் ஒளி அமைப்பான்கள் போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், இக்கட்டடமானது, காப்பாளர் அறைகள், அலுவலக அறைகள், உணவு உண்ணும் அறைகள், பொது அறைகள், சமையலறை போன்ற பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, துணை மேயர் மகேஷ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் நே. சிற்றரசு, உயர்கல்வித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.கோபால், கல்லூரிக் கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

> **“முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், விடுதிகளை திறந்து வைத்து பார்வையிட்ட பின், அங்கு தங்கியுள்ள சிறப்பு மாணவ, மாணவியர்களிடம், அவர்களுக்கு தேவையான வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதா என்றும், வேறு என்ன வசதிகள் தேவை என்றும் வினவினர். அதற்கு அம்மாணவ, மாணவியர்கள் தேவையான வசதிகள் உள்ளது என்றும், விடுதியை அமைத்து தந்ததற்கு தங்களது நன்றியினையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டனர்.”**

---

### உத்தரப்பிரதேசத்தில் கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறச் சென்ற

# ராகுல் - பிரியங்கா காந்தி தடுத்து நிறுத்தப்பட்டனர்!

## உத்தரப்பிரதேசத்தில் பா.ஜ.க. அரசைக் கண்டித்து காங்கிரசார் முழக்கம்!

*லக்னோ, டிச. 6 -*

உத்தரபிரதேச மாநிலம் சம்பல் பகுதியில் இருந்த ஹரிஹர் கோயிலை இடித்து விட்டு மசூதி கட்டப்பட்டதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இந்த விவகாரத்தில் தொல்லியல் துறையினர்கள ஆய்வுக்குச் சென்ற போது அங்கு வன்முறை வெடித்தது. அப்போது காவல்துறை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் பலியாகினர். இந்த விவகாரம் நாடாளுமன்ற இரு அவைகளிலும் எதிரொலித்தது.

இந்நிலையில் மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி ஆகியோர், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் கூற நேற்று முன்தினம் டெல்லியிலிருந்து உத்தரப்பிரதேச மாநிலம் சம்பல் பகுதிக்கு சென்று கொண்டிருந்தனர். அப்போது, மாநில எல்லையான காசிப்பூரில் தடுப்புகளை ஏற்படுத்திய உத்தரப்பிரதேச காவல்துறையினர், காரில் வந்த ராகுல்காந்தியையும், பிரியங்கா காந்தியையும் தடுத்து நிறுத்தினர். மேலும், அவர்கள் செல்லும் தேசிய நெடுஞ்சாலை முழுமையாக மூடப்பட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இதனால் ராகுல்காந்தியும், பிரியங்காகாந்தியும் நீண்ட நேரம் சாலையில் காத்திருந்தனர். அப்போது, உத்தரப்பிரதேச காவல் துறையினருடன் காங்கிரஸ் கட்சியினர் கடும் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர். நாட்டில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூட சொல்ல கூடாதா என கேள்வி எழுப்பினர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. நீண்ட நேர காத்திருப்புக்கு பின்னரும் ராகுல்காந்தியையும், பிரியங்கா காந்தியையும் உத்தரப்பிரதேச காவல் துறையினர் அனுமதிக்கவில்லை.

மேலும், இருவரையும் டெல்லிக்கே திருப்பி அனுப்பினர். இதற்கு காங்கிரஸ் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

---

### அதானி விவகாரம்! நாடாளுமன்றத்திலிருந்து

# எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு - ஆர்ப்பாட்டம்!

## தமிழ்நாட்டிற்கு புயல் பாதிப்பு நிவாரணம் ரூ.2000 கோடி கேட்டு வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச. 6 –

அதானி ஊழல், விவசாயிகள் பிரச்சினை, தமிழ்நாட்டுக்கு புயல் நிவாரணம் உள்ளிட்டவைகள் குறித்து விவாதிக்க அனுமதி மறுக்கப்படுவதைக் கண்டித்து மாநிலங்களவையில் இருந்து எதிர்க்கட்சிகள் நேற்றும் வெளிநடப்பு செய்தன.

அதானி ஊழல், விவசாயிகள் பிரச்சினை உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து மாநிலங்களவையில் விவாதிக்க அனுமதி கோரி எதிர்க்கட்சிகள் சார்பில் நோட்டீஸ் அளிக்கப்பட்டிருந்தன.

இதேபோன்று தமிழ்நாட்டுக்கு 2 ஆயிரம் கோடி ரூபாய் புயல் நிவாரணம் வழங்கவேண்டும், மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் ஆய்வு செய்ய ஒன்றிய குழுவை மாநிலத்துக்கு அனுப்ப வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா நோட்டீஸ் அளித்திருந்தார். ஆனால், மாநிலங்களவை தலைவர் ஜகதீப் தன்கர், எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டார். இதற்கு கண்டனம் தெரிவித்து மாநிலங்களவையில் இருந்து எதிர்க்கட்சிகளின் எம்.பி.க்கள் நேற்று முன்தினமும் வெளி நடப்பு செய்தனர்.

வெளிநாடுகளில் ஒப்பந்தங்களை பெற அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்த விவகாரத்தில் கவுதம் அதானிக்கு அமெரிக்க நீதிமன்றம் பிடிவாரண்ட் பிறப்பித்துள்ளது.

இந்நிலையில், உலகளவில் இந்தியாவின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்திய அதானி மீது உரிய விசாரணை நடத்தி கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஒன்றிய அரசுக்கு, இந்தியா கூட்டணி கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. நாடாளுமன்றத்திலும் இதுகுறித்து குரல் எழுப்பப்பட்டு வருகிறது. ஆனால், ஒன்றிய அரசு, இதற்கு செவி சாய்க்காமல் உள்ளது. இந்நிலையில், அதானி மீது நடவடிக்கை எடுக்க மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில், இந்தியா கூட்டணி கட்சி எம்.பி.க்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினமும் நாடாளுமன்ற வளாகத்தில் காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட ‘இந்தியா கூட்டணி’ கட்சி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதானி முறைகேடு குறித்து விசாரிக்கவேண்டும், அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும், இவ்விவகாரம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க அனுமதிக்க வேண்டும் என வலியுறுத்தி கைகளில் பதாகைகளை ஏந்தியபடி முழக்கங்களை எழுப்பினர்.



ராஜா செல்லமுத்து எழுதி இயக்கிய ‘கலைஞரின் பேனா’ என்ற குறும்படத்தை நக்கீரன் கோபால் வெளியிட, தி.மு.க. தலைமைக் கழகப் பேச்சாளர் வேலுத்தங்கம் பெற்றுக் கொண்டார். அதோடு ராஜா செல்லமுத்து மக்கள் குரல் பத்திரிகையில் எழுதிய 2000 சிறுகதைகளின் பெயர்ப் பட்டியலை திரைப்பட இயக்குநர் எஸ்.பி.முத்துராமன் வெளியிட, ஃபெப்சியின் துணைத் தலைவர் அசோக் மேத்தா பெற்றுக் கொண்டார். ‘சமூக இடைவெளி’ என்ற சிறுகதைத் தொகுப்பை இயக்குநர், நடிகர் கே. பாக்யராஜ் வெளியிட திரைப்பட இயக்குநர் எழில், மக்கள் குரல் ராம்ஜி பெற்றுக் கொண்டார்கள். தலைமை : முத்துக்குமார் .ஆசிரியர் மக்கள் குரல். டிரினிட்டி மிரர் நூல் பற்றி உதயம் ராம் பேசினார்கள். சிறப்பு அழைப்பாளர் கவிஞர் மீரா நாயகம் பாளையங்கோட்டை தமிழ்த்தாய் வாழ்த்து. திருமதி.கீதா ஸ்ரீ வரவேற்புரை .நல் வாஞ்சிநாதன் நன்றியுரை. கே.வி. வாசுதேவன் மூத்த பத்திரிகையாளர் தொகுப்புரை: சாருலதா மணி திரைப்பட பின்னணிப் பாடகி. சிறப்பு அழைப்பாளர் கவிஞர் மீரா வள்ளி நாயகம் ஏற்புரை .ராஜா செல்லமுத்து.